# 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் அவசர கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

விருத்தாசலம் நகராட்சியில் 14வது நிதிக்குழு மான்ய திட்டம் 2019–2020 ன் கீழ் ரூ. 249.19 இலட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகளுக்கு கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிக்காக அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Ward No | Name of the Road | Estimate amount (Rs.in Lakh) |
|---|---|---|---|
| 1 | 7 | Formation of B.T Surface Road With SWD, Culvert @ Kanmani nagar W .no:07 | 16.00 |
| 2 | 7 | Providing B.T Surface Road With SWD @ Kattukudalur to Kandiyankuppam Link Road W .no:07 | 6.00 |
| 3 | 7 | Providing B.T Surface Road With SWD @ Kanmani Nagar Opp MGR Nagar, W .no:07 | 6.00 |
| 4 | 7 | Providing B.T Surface Road With SWD, Culvert @ Kanmani Nagar Kandiyankuppam, W .no:07 | 27.00 |
| 5 | 10 | Providing B.T Surface Road With SWD@ Vallalar street Kamaraj Nagar W .no:10 | 16.00 |
| 6 | 14 | Providing B.T Surface Road With SWD, @ Annanagar Opp Roja Street, W .no:14 | 10.00 |
| 7 | 14 | Providing B.T Surface Road With SWD @ A P Nagar I Cross W .no:14 | 28.00 |
| 8 | 14 | Providing B.T Surface Road With SWD @ A P Nagar II Cross W .no:14 | 28.00 |
| 9 | 14 | Providing B.T Surface Road With SWD @ A P Nagar III Cross W .no:14 | 28.00 |
| 10 | 16 | Providing B.T Surface Road With SWD @ Rojapoo treet Extension Periyar nagar W .no:16 | 24.19 |
| 11 | 31 | Providing B.T Surface Road @ Bairagi madam Part -I Thillai Nagar W .no:31 | 30.00 |
| 12 | 31 | Providing B.T Surface Road @ Bairagi madam Part-II Thillai Nagar W .no:31 | 30.00 |
| | | **TOTAL** | **249.19** |

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3715 நாள். 03.01.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 2.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7ல் எம்.ஆர்.கே நகர் ஆறுமுகம் தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நிர்பதால் கொசு உற்பத்தியாகி டெங்கு, மலேரியா போன்ற தொற்று நோய் ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், அப்பகுதி பொதுமக்ளின் நலன் கருதி மேற்படி பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7,25,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3716 நாள். 03.01.2020.**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16ல் முத்து வள்ளல் திருமண மண்டப தெருவில் மழைக்காலங்களில் சேரும் சகதியுமாக சாலை உள்ளதால், நடப்பதற்கு சிரமமாக உள்ளதாலும், வண்டி வாகனங்கள் செல்ல சிரமமாக இருப்பதால் அப்பகுதி பொதுமக்ளின் நலன் கருதி அப்பகுக்கு சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5,70,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3717 நாள். 03.01.2020.**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண்.4.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 28ல் மணலூர் அய்யனார் கோயில் தெருவில் சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் நடப்பதற்கு சிரமமாக உள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5,60,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3718 நாள். 03.01.2020.**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண். 5.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2 டேனிஷ் மிஷன் பள்ளி பின்புறம் ஓம் சக்தி கோயிலுக்கு செல்லும் சாலை பாதசாரிகள் நடப்பதற்கு சிரமமாகவும், மழைக்காலங்களில் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் சாலையில் செல்லும் போது மழைநீர் குழிபோல் காட்சி அளிப்பதாலும், மேற்படி சாலையினை சிமெண்ட் சாலையாக அமைத்து தரக் கோரி அப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 8,60,000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3719 நாள். 03.01.2020.**

**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண். 6.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 9,95,000/— மதிப்பீட்டில் வார்டு எண் 1 முதல் 33 வரை குடிநீர் பகிர்மான குழாயில் ஏற்படும் பழுதுகளை நீக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3633,ள்.29.11.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 31.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.05 % குறைவு |
| 2. | திரு.வி.பழனிசாமி,<br>ஒப்பந்ததாரர் | (+) 1.20 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஆர்.ராதாகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 5979 /19/இ1)

**தீர்மானம் எண். 3720 நாள். 03.01.2020.**

**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**பொருள் எண். 7.**

இந்நகராட்சிக்குட்பட்ட எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் சொத்துவரி , குடிநீர்கட்டணம் ,தொழில் வரி மற்றும் கடை வாடகை , D&O உரிமக்கட்டணம் ஆகியவைகளின் நிலுவை தொகைகளை வசூலிக்க சிறப்பு முகாம் நடத்த அறிவிப்புகள் அச்சடித்து வழங்கும் பணிக்கு தோராய செலவினம் ரூ. 50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3721 நாள். 03.01.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (பொ),
விருத்தாசலம் நகராட்சி.